**சுருக்கம்**

தொழில் துறை – 2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் – ஆலங்குளம் சிமெண்ட் ஆலை வளாகத்தில், மணிக்கு 80 மெட்ரிக் டன் அரவை திறன் கொண்ட ஒரு புதிய சிமெண்ட் அரவை இயந்திரம், கட்டமைப்பு வசதிகளுடன் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும் – அனுமதி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2) துறை**

அரசு ஆணை (டி) எண்.40

நாள் : 25.04.2022
சுபகிருது – சித்திரை – 12
திருவள்ளுவர் ஆண்டு 2053

ஆணை:

2022–2023ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

> "1969ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் தற்பொழுது பயன்பாட்டில் உள்ள இரண்டு சிமெண்ட் அரவை இயந்திரங்கள் மிக பழமையான காரணத்தால் அதிக அளவில் பராமரிப்பு பணிகள் தேவைப்படுகின்றன. எனவே, தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் உள்ள அதிக அளவிலான சிமெண்ட் தேவையினை கருத்திற்கொண்டு, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை வளாகத்தில் மணிக்கு 80 மெட்ரிக் டன் திறனுடைய புதிய சிமெண்ட் அரவை இயந்திரம் ஒன்று, கட்டமைப்பு வசதிகளுடன் சுமார் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் அமைக்கப்படும்".

2. மேற்காணும் திட்டத்தினை, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு, நடைமுறைகளில் உள்ள விதிகளைப் பின்பற்றி, குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்த அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சி குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பணிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. கிருஷ்ணன்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்,
5–வது தளம், ஆவின் இல்லம்,
எண்.3A, பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை, நந்தனம், சென்னை– 600 035.
நகல்
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009,
தொழில் (அ.ந.மு2/வ.செ.தி.1) துறை, சென்னை – 600 009.
இ.கோ/உ.நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 25/4/2022

25.4.2022